## பேதுரு



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடனே கூட ஊழியம் செய்வதற்கு, அவரால் நேரடியாக அழைக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலர்களாவர். ஆண்டவர் தன்னுடைய சித்தத்தை, திட்டத்தை இவ்வுலகில் தொடர்ந்து செய்ய இவர்களை தெரிந்தெடுத்தார். அப்படியாக தெரிந்தெடுக்கபட்டவர்களில் முதன்னையானவர் அப்போஸ்தலர் பேதுரு ஆவார். வாழ்க்கையில் சறுக்கல்கள் இருந்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதற்கு ஓர் நல்ல முன்மாதிரியாய் அவர் வாழ்க்கை காணப்பட்டது. அவற்றில் சில காரியங்களை நாம் இப்பொழுது தியானிப்போம்.

### 1. ஆண்டவரை பற்றி அறிந்து கொண்டது:

அப். பேதுரு, தனது சகோதரர் அந்திரேயா மூலமே ஆண்டவரை பற்றி முதலாவது அறிந்துகொண்டார். **யோ 1:40,41** கூறுகிறது **"யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.",** இங்கு அந்திரேயா நாங்கள் மேசியாவை கண்டோம் என்று கூறுவது, பேதுரு மேசியா வருவதை ஆவலாய் எதிர்பார்த்து காத்துகொண்டிருந்த இஸ்ரவேல் மக்களில் ஒருவர் என்பதை கண்டுகொள்ளலாம். ஆதலால் அப்படிப்பட்ட மேசியா

எப்படி இருப்பார் என்பதை காண அந்திரேயா மூலமாய் ஆண்டவரிடம் அழைத்து வரபட்டார். **யோ 1:42** கூறுகிறது **“பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.”** இங்கு ஆண்டவரை கண்ட பேதுரு என்ன கூறினார் என்பது பதிவு பண்ணபடவில்லை. ஆனால் ஆண்டவர் பேதுருவை குறித்து ஒரு நோக்கம் கொண்டிருந்தார் என்பதை அவர் கேபா என்று அவருக்கு பெயரிட்டது மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். இன்று நம்மையும், அவர் அவ்வாறே பெயரிட்டு பிரித்து தம்முடைய சித்தத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்ற அழைத்திருக்கிறார். பேதுருவை போல் நாமும் அதற்கு கீழ்படிந்தால், இம்மையிலும், மறுமையிலும் நித்திய பாக்கியம் நமக்கு கிடைக்கும்.

## 2. பின்செல்லுதல்:

ஆண்டவரை முதலாவது பேதுரு கண்டபொழுது, ஆண்டவர் தனக்கென வைத்திருக்கும் நோக்கத்தை அவர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. அவர் மறுபடியும் தன் மீன் பிடி தொழிலுக்கே சென்றார். ஆண்டவர் அவரை தேடிசென்றார். **லூக் 5:1-3** கூறுகிறது **“பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலைசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.”** மேற்க்கண்ட வசனங்களில் அவர் சீமோனுடைய படவை கேட்டுபெற்று அதின்மேல் அமர்ந்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ண வலைகளை அலசிக்கொண்டே பேதுருவும் அதை கேட்டிருப்பார். ஆனால் அதே நேரத்தில் அன்று மீன்கள் எதுவும் கிடைக்காதலால், பிழைப்பிற்கு என்ன செய்வது என்ற கவலையும் அவர் மனதில் இருந்திருக்கும். ஆனால் **லூக் 5:4,5** வசனங்களில் **“அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.”** இங்கு மீன்பிடிக்கும் தொழில் செய்பவரான அவர், தன் திறமையில் எல்லா முயற்சியும் செய்து தோற்ற பின்பு, இனி எதுவும் கிடைக்காது என்ற நேரத்தில் ஆண்டவர் கூறியதை நம்பி அவர் வலையைப் போட்டது, அவர் தன் வாழ்வை ஆண்டவர் கையில் அர்பணிக்க வைத்த முதல் அடியாகும்.

**லூக் 5:6,7** கூறுகிறது **“அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்”**. ஆனால் **“சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்**

**போகவேண்டும் என்றான்." (லூக் 5:8).** இங்கு மீன் கிடைத்ததற்காக சந்தோஷபடாமல், உள்ளான தன் வாழ்கையின் நிலை பாவத்தினால் நிறைந்திருக்கிறது என்ற உணர்வை பெற்றார். ஆண்டவர் அவர் வாழ்க்கையில் உலக பிரகாரமாக அற்புதம் செய்தபொழுது, அதற்காக ஆண்டவருக்கு நன்றி கூறிவிட்டு, தன் போக்கில் வாழாமல், ஆண்டவர் பாவியாகிய தன்னையும் ஒரு பொருட்டாக எண்ணி வந்து அற்புதம் செய்தாரே என்ற எண்ணமே அவரை இவ்வாறு பேச செய்தது. ஆண்டவரும் இத்தருணத்திற்காகவே காத்திருந்தார். ஏனெனில் இனி அவர் இவ்வுலக வாழ்வை பற்றி கவலைப்படுவதை காட்டிலும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கான சிந்தனை அவர் மனதில் தோன்றிவிட்டது. எனவே இனி அவர் மனுஷர்களை பிடிக்க தயாராகி விட்டார். ஆதலால் ஆண்டவர் **லூக் 5:10** இல் **"சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்."** மேலும் **லூக் 5:11 இல் "அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்."**. இங்கு எல்லாவற்றையும் விட்டு என்ற வார்த்தை மிக முக்கியமானதாகும். இனி அவர்கள் (பேதுரு மற்றும் அவரது கூட்டாளிகள்) எதைப்பற்றியும் கவலைப்பட போவதில்லை. இனி ஆண்டவர் மட்டுமே அவர்களுக்கு போதுமானவர். [குறிப்பு: எல்லாவற்றையும் விட்டு என்னும் தியான தலைப்பில் மேற்க்கண்ட வசனங்கள் விவரமாக தியானிக்கப்பட்டுள்ளது. நமது இணையதளத்தில் www.jesussoldierindia.wordpress.com காணவும்.).

### 3. நித்திய ஜீவ வசனங்கள்:

ஆண்டவர் நானே ஜீவ அப்பம் என்ற சத்தியத்தை கூறின பொழுது, **யோ 6:48-52** வசனங்களில் **"ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள்"**. இங்கு நாம் காண்கிறபடி ஆண்டவர் கூறிய சத்தியத்தை விளங்கி கொள்வது மற்றவர்க்களுக்கு கடினமாய் இருந்தது. **யோ 6:60,66** கூறுகிறது **"அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்."** இதனால் ஆண்டவர் **யோ 6:67,68** வசனங்களில் **"அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே."** என்றார். மேற்கண்டவற்றில் பேதுரு கூறிய ஒரு அருமையான வாக்கியம் **"நத்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"** என்பதாகும். ஆம் ஆண்டவரை பேதுரு பின்பற்றியதற்கு காரணம் அவர் அற்புதம் செய்கிறவர், தங்களை போஷிக்கிறவர் என்பதற்காக அல்ல நத்திய ஜீவ கரையில் சேர்த்திடும் கிருபை பொருந்திய வார்த்தைகளையும், அதனால் உண்டான அவரோடு

கூடிய ஐக்கியத்தையும் மேன்மையாக கருதியதினாலேயே கடினமான உபதேசமாயிருந்தாலும், தன்னுடன் இருந்த மற்றவர்கள் பின்வாங்கினாலும், அவர் பின்வாங்கவில்லை. கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை பிரிப்பது எது என்று, அப். பவுல் கூறியதை போல, அவருடைய அன்பிற்காகவே அவர் வாயிலிருந்து புறப்பட்ட நித்திய ஜீவ வசனங்களுக்காகவே அவரை பின்பற்றினார்.

### 4. ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்:

ஒருமுறை ஆண்டவர் **"பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்." (மத் 16:13,14)**, இங்கு ஒவ்வொருவரும் ஆண்டவர் கேட்ட கேள்விக்கு, தாங்கள் அறிந்த, தெரிந்த பதிலை கூறினார்கள். ஆனால் அவரோடு ஐக்கியப்பட்டிருந்த பேதுரு ஆண்டவரை பற்றி தனது அனுபவ பூர்வமான பதிலை தெளிவாய் கூறினார். **"சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்." (மத் 16:16).** இதை கேட்டவுடனே ஆண்டவர் கூறிய பதில் **"இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்." (மத் 16:17)**. ஆவிக்குரிய வாழ்க்கையில் மனுஷ சத்தத்தை விடுத்து தேவ சத்தத்தை கேட்க அவர் பழகி கொண்டார்.

### 5. கடலின் மேல் நடத்தல்:

**மத் 14:24-33** வசனங்களில் சீஷர்கள் சென்றுகொண்டிருந்த படகு எதிர்காற்றில் சிக்கி கொண்டபொழுது, ஆண்டவர் இரவின் நாலாம் ஜாமத்திலே கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார் **(மத் 14:25)**. அதை கண்ட அவர்கள் கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். ஆண்டவர் அவர்களிடம் நான் தான் பயப்படாதிருங்கள் என்றார் **(மத் 14:27)**. அப்பொழுது **"பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்." (மத் 14:28,29)** இங்கு கொந்தளிக்கும் கடலின் மேல் நடக்க வேண்டியதற்கு ஒரு முகாந்தரமும் இல்லை. ஆனால் பேதுரு என்ன நினைத்தாரோ தெரியவில்லை, ஒருவேளை ஆண்டவரிடம் சென்று விட்டால் பாதுகாப்பாய் இருப்போம் என்று நினைத்திருக்கலாம். ஆனால் சற்றும் பயப்படாமல் கொந்தளிக்கும் கடலில் காலை எடுத்து வைத்தார். கடலை பற்றி நன்கு அறிந்தவரான பேதுரு **"காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது." (மத் 14:30-32)**. இங்கு காற்று பலமாய் இருப்பதை கண்டு பேதுரு அவிசுவாச பட்டு அமிழ்ந்தாலும், நாம் கவனிக்க வேண்டிய இரண்டு சத்தியங்கள் உள்ளன. ஒன்று, கொந்தளிக்கும் கடலை போல, நம் வாழ்க்கையில் போராட்டமான சூழ்நிலைகள் உருவாகும் பொழுது, ஆண்டவர் வந்துவிட்டார் என்று தெரிந்தவுடனே,

தைரியமாய் பேதுரு கடலின் மேல் காலை ஆண்டவர் அனுமதியுடன் வைத்ததை போல, ஆண்டவரின் துணையோடு அதை எதிர்கொள்ள அவரிடம் தஞ்சம் அடைவது. இரண்டாவது அவிசுவாசத்தினால் பதறினாலும், நோக்கி கூப்பிடுவது ஆண்டவரை மாத்திரமே இருக்க வேண்டும். அப்பொழுது காற்று அமர்ந்தது போல், நம் வாழ்க்கையில் வீசும் போராட்ட காற்றுகளும் அடங்கும்.

### 6.மறுரூப மலை:

பேதுருவுக்கு ஆண்டவர் சில விசேஷித்த அனுபவங்களின் கூடாக நடத்தி சென்றார். அவற்றில் ஒன்று மறுரூப மலையின் அனுபவம். **மத் 17:1-4** வசனங்களில், பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவான் ஆகியோருக்கு கிடைக்கும் அனுபவம், பழைய ஏற்பாட்டில், மோசே, எலியா போன்ற வல்லமையான தேவ மனிதர்களுக்கு கிடைத்த அனுபவத்தை போன்றது. இங்கும் பேதுரு முந்திரி கொட்டை போல பேசுகிறார். ஆனால் இந்த மகிமையான தரிசனத்தை காண செய்த ஆண்டவர் அதைப்பற்றி மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து உயிர்தெழுலும் வரைக்கும் யாரிடமும் கூற வேண்டாம் என்றார். இங்கு பேதுரு அடைந்த அனுபவம், பிற்காலத்தில், ஊழியத்திற்கு அவருக்கு பிரயோஜனமாயிருந்தது. **2 பேதுரு 1:17,18** வசனங்களில் **"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்."** இந்த மகிமையான அனுபவத்தை தன் நிருபத்தில் எழுதுகிறார். ஆண்டவரோடு இருந்த எத்தனையோ அனுபவங்கள் இருந்தாலும், இந்த ஒரு அனுபவம் அவரால் மறக்கமுடியாததாகும். இங்கு நாம் கற்று கொள்ளும் சத்தியம், ஆண்டவரோடு நாம் எவ்வளவு, நெருங்கி ஐக்கியமாய் இருக்கிறோமோ, அந்த அளவிற்கு அவரிடம் இருந்து மகிமையான அனுபவங்களை நாம் பெற்று கொள்ள முடியும்.

### 7. ஆண்டவரின் சரீரத்தை காண ஓடிவருதல்:

பேதுரு ஒருவேளை ஆண்டவரை மறுதலித்து இருந்தாலும், பின்பு மனஸ்தாப பட்டு மனங்கசந்து அழுதார். அதற்கு காரணம் ஆண்டவர் அவருக்காக பண்ணின வேண்டுதல் ஆகும் **(லூக் 22:31-34).** மேலும் ஆண்டவருடைய சரீரத்தை காணவில்லை என்று கல்லறைக்கு சென்ற மகதலேனா மரியாள் கூறியபொழுது, யாருக்கும் பயப்படாமல் கல்லறையை நோக்கி ஓடினார் பேதுரு **(யோ 20:1-3).** இரண்டு நாட்களுக்கு முன்பு ஆண்டவரை யாரென்று தெரியாது என்று மறுதலித்த பேதுரு, கல்லறையை சுற்றி காவல் இருக்கும் என்று தெரிந்தும், தான் ஆண்டவரோடு ஐக்கியப்பட்டவர் என்பதை வெளிப்படுத்த அவர் இப்பொழுது பயப்படவில்லை. ஆண்டவர் சரீரத்தை காணவில்லை என்று கூறினவுடனே, ஆண்டவர் மீது வைத்த அன்பினால், எதைக்குறித்தும் பயப்படாமல் ஆண்டவரிடம் ஓடிவந்தார். இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், ஒருவேளை பேதுருவை போல் நம் வாழ்க்கையிலும் பின்மாற்ற சூழ்நிலைகள் காணப்பட்டாலும். ஆண்டவரிடம் உண்மையான அன்பு கூறும்பொழுது, நாம் எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையில் இருந்தாலும், ஆண்டவரிடம் நாம் ஓடி வந்துவிடுவோம். இதையே நாம் இவ்விடத்திலும் காண்கிறோம்.

இவ்வாறாக பேதுரு பல அனுபவங்களை பெற்றிருந்தும், **யோவான் 21ஆம்** அதிகாரத்தில் மறுபடியும் மீன்பிடி தொழிலுக்கு சென்றபொழுது ஆண்டவர் மறுபடியும் அவரை தேடிவந்து, **"யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" (யோ 21:15-17)** என்று மூன்று தடவை கேட்டு, பேதுருவை குறித்த அவரது திட்டத்தையும் கூட அவருக்கு வெளிப்படுத்தினார் **(யோ 21:18,19)**. இங்கு நாம் காணும் ஒரு அருமையான காரியம், ஆண்டவருக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் எழுதின இந்த சுவிசேஷத்தில், ஆண்டவர் பேதுருவின் அன்பை, ஒரு தாய் தன் பிள்ளையிடம் எதிர்பார்க்கும் அன்பை போல் தேடினதை காணலாம். இதுவே ஆண்டவருக்கும் பேதுருவுக்கும் இடையே ஒரு விசேஷித்த பிணைப்பு இருப்பதை விளங்கி கொள்ள, தக்க சான்று ஆகும். இவ்வாறு ஊழியத்தை ஆரம்பித்த பேதுரு, மேல்வீட்டறையில் வந்தெறங்கின பரிசுத்த ஆவியினால் நிரப்ப பட்டு வல்லமையான ஊழியத்தை செய்தார். ஆதி அப்போஸ்தல சபையில் ஆயிரக்கணக்கானோர் பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு இரட்சிக்கபட்டனர். அற்புதங்களும், அடையாளங்களும் பேதுருவின் மூலமாய் நடைபெற்றன. இவற்றை எல்லாம் நாம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காணலாம்.

எனவே பேதுருவை போல, இன்றும் ஆண்டவர் நம்மிடமும் இதைப்போன்ற ஒரு அர்பணிப்பு நிறைந்த வாழ்க்கையையே எதிர்பார்க்கிறார். பேதுருவை போல் நம்முடைய ஆரம்பமும் சாதாரண நிலையில் இருந்தாலும், ஆண்டவரோடு பயணித்து வரும்பொழுது, ஆண்டவர் மகிமையான காரியங்களை நம் வாழ்க்கையில் செய்து, பேதுருவை போல் நம்மையும் பிரயோஜனமுள்ள ஒரு பாத்திரமாய் மாற்றி, மகிமையாய் உபயோகித்து, நித்திய ஜீவ கரையில் சேர்பார். ஆமென், அல்லேலூயா.